இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 Fax: 021 - 222 9041, ISSN 1391-7633

மலர்: 141 இதழ் : 05 திகதி: 12.03.2017 விலை : 20.00

## பணம் அல்ல, பிறரை அன்பு கூர்வதே உன்னை செல்வராக்கும்

### தவக்காலச் செய்தியில் திருத்தந்தை

மார்ச் முதல் நாள் தொடங்கும் தவக்காலத்திற்கென."இறைவார்த்தை ஒரு கொடை. மற்ற மனிதர்களும் ஒரு கொடை" என்ற தலைப்பில் திருத்தந்தை பிரான்சிஸ் எழுதியுள்ள தவக்காலச் செய்திவெளியிடப்பட்டுள்ளது.

இறை வார்த்தையிலும் அருள டையாளங்களிலும் மற்ற மனிதரி லும் இயேசுவைச் சந்திக்க நம்மையே தயார்படுத்தவும்;நம்கண்களைமறைக் கும் பாவத்தினின்று தூய்மையடை யவும், தேவையில் இருப்போரில் இயேசுவைக் கண்டு அவர்களுக்குப் பணியாற்றவும் ஏற்றது தவக்காலம் என்று இச்செய்தியில் திருத்தந்தை கூறியுள்ளார். திருஅவை நமக்கு வழங் கும் நோன்பு, செபம், தர்மம் செய்தல் ஆகியவை வழியாக நம் ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்தவும் முழுமனத் துடன் நாம் இறைவனிடம் திரும்பி வரவும் தவக்காலத்தில் அழைப்பு விடுக்கப்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

லூக்கா நற்செய்தியில் கொடுக் கப்பட்டுள்ள செல்வரும், இலாசரும் என்ற உவமையை மையப்படுத்தி தனது தவக்காலச் செய்தியை வழங்கி யுள்ள திருத்தந்தை செல்வரை விட ஏழையான இலாசரைப் பற்றியே நற் செய்தி விரிவாகப் பேசுகிறது என் பதையும் விளக்கியுள்ளார்.

பிற மனிதர்களும் ஒரு கொடையே ஒருவருக்கொருவர் ..

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## யாழ் பட்டினத்தின் மாதாவுடன் யாழ் ஆயர்



யாழ். ஆயர் யாழ். பட்டினத்தின் மாதாவுடன் காண்க

அண்மையில் இந்தியாவின் கோவா மறைமாவட்டத்துக்கு விஜயம் செய்த ஆயர் பேரருட்திரு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் அம் மறைமாவட்ட ஆயரைச் சந்தித்தார்.

இப் பயணத்தின் போது ஆயர் அவர்கள் புனித சவேரியாரின் புனித உடலை தரிசித்த துடன் கோவாவில் தூய யோசப் வாஸ் அவர்கள் வாழ்ந்த இல்லம், அவரது சபையின் தியான ஆச்சிரமம் என்பவற்றையும் தரிசித்தார். யாழ். மறைமாவட்டத்திற்காகவும் குறிப்பாக இறைமக்க ளின் கருத்துக்களுக்காகவும் இவ் யாத்திரையில் செபித்துக் கொண்டதாக யாழ். ஆயர் அவர் கள் பாதுகாவலனுக்கு தெரிவித்தார்.

இப் பயணத்தின் போது நம்மில் பலர் அறிந்திராத யாழ் பட்டினத்தின் புதுமை மாதா (Our lady of Jaffna) என்கின்ற அன்னையின் புதுமை மிகு திருச்சுருபத்தை ஆயர் அவர்கள் தரிசித்து ஆசீர் பெற்றார். (தொடர்ச்சி 8ம் பக்கம்)

## வவுனிக்குளத்தில் கல்வாரிப் பூங்கா

யாழ். மறைமாவட்ட தவக்கால யாத் திரைத் தலங்களில் ஓர் புதிய கல்வாரிப் பூங்கா அமைக்கப்பட்டு 10.03.2017 வெள்ளிக்கிழமை யாழ். ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் திறந்து வைக்கப் பட்டுள்ளது. இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு நிகழ்வுகளின் தியான மையமாக இவ் அழகிய கல்வாரிப் பூங்கா வவுனிக்குளத்தில் காட்சி கொடுக்கின்றது.

இறைமக்கள் குடும்பங்களாகவும், குழுக்களாகவும், பங்கு ரீதியாகவும் பாடுகள், மரணம், உயிர்ப்பின் பாஸ்கா நிகழ்வுகளைத் தியானித்து தவக்காலத் தில் ஆன்மீகப் புதுப்பித்தலை மேற் கொள்ள இப்புதிய கல்வாரிப் பூங்கா வழிசமைக்கின்றது. அமைதியானசூழ லில் அமைந்துள்ள இக் கல்வாரிப் பூங்காவின் முழுமையான நிர்மாணிப் புகளையும்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## பாசையூர் விளையாட்டு மைதான அரங்கு திறப்பு விழா



பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டு மைதான அரங்கை யாழ் ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அண்மை நாளில் திறந்து வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவைசேனாதிராசா ஈ.சரவணபவன் வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் விளையாட்டுத்துறைஅதிகாரிகள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## பிரான்சிஸ்கன் மூன்றாம் சபையின் புதிய நிர்வாக மாற்றம்



பிரான்சிஸ்கன் மூன்றாம் சபையின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 24.02.2017 அன்று நடைபெற்றது. இந் நிர்வாகத் தெரிவினை சபையின் தலைமைப்பீட தேசிய மட்ட சகோதரி கள் தர்ஸினி, திரீஸ், மொனிக்கா ஆகியோர் கலந்து கொண்டு மேற். கொண்டனர்.

யாழ், 3ம் சபையின் புதிய தலை வியாக அந்தோனிப்பிள்ளை மேரி யம்மா, உபதலைவராக செபஸ்ரி கிறிஸ்துராசா செயலாளராக ஜோர்ச் புஸ்பசீலி, பொருளாளராக அலெக்ஸ் சாண்டர் றெஜினா, ஊக்குவிப்பாளராக சற்குணராஜா ஜெயமலர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர் சபையின் ஆன்மீக ஆலோசகராக தொடர்ந்து அருட்பணி S.J.இராஜநாயகம் அடிகளார் பணி யாற்றுவார்.

கடந்த 25 வருடாங்களுக்கு மேலாக இச் சபையை உயிரோட் டத்துடன் வழிநடத்தி வந்த திரு.நீக் லஸ் அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக சபையின் தலைவர் பதவியில் இருந்து ஓய்வு பெறுகின் றார். திரு.நீக்லஸ் அவர்களின் பணியை சபை என்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றது.

## 51 வது உலக சமூகத்தொடர்பு நாளுக்கான திருத்தந்தையின் செய்தி

நம்மைச் சுற்றியுள்ளவர்கள், யதார்த்தம் மற்றும் நம்பிக்கையோடு உலகத்தை நோக்குவதற்கு உதவும் நோக்கத்தில், பிறர் மீது முற்சார்பு எண் ணங்களை விலக்கி, சந்திப்புக் கலா சாரத்தைப் பேணி வளர்க்குமாறு, 51வது உலக சமூகத் தொடர்பு நாளுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதியுள்ள செய்தியில் கேட்டுக் கொண்டுள்ளார்.

மோசமான செய்திகள் குறித்து தொடர்ந்து கவனம் செலுத்துவதால் ஏற்படும் அச்சத்தையும் பதட்டத்தை யும் களைய வேண்டும் என்பதில், தான் உறுதியான நம்பிக்கை கொண் டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள திருத் தந்தை திருப்தியற்ற மற்றும் ஒதுங்கியி ருக்கும் நிலை, சில நேரங்களில், தீமைகளுக்கு எல்லைகளே இல்லை என்ற எண்ணத்தையும், அச்சத்தை யும் உருவாக்காமல் இருப்பதற்காக, நாம் உழைப்போம் என்று, கேட்டுக் கொண்டுள்ளார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# எமது எண்ணம்

## தமிழக மீனவர் விவகாரம் அரசியல் பிரச்சினையாக மாறக்கூடாது

தமிழக மீனவர்கள் எல்லைதாண்டி இலங்கையின் வடக்குக் கிழக்கு கடற்பரப்பில் குறிப்பாக வடபகுதி கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவது ஏற்புடையதல்ல. எல்லை மீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட நூற்றுக்கும் அதிகமான தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பின்னர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்படுவதும் விடுதலை செய்யப்படுவதும் வழமையாக இருந்து வந்த நிலையில் கடந்த சில தினாங்களுக்கு முன்னர் தமிழக மீனவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இலங்கைக் கடற்படையினர் தான் சுட்டுக் கொன்றதாக இந்திய ஊடகங்கள் கண்டனம் வெளியிட்டுள்ளன. ஆனால் இலங்கைக் கடற்படை மறுத்துள்ளது. கச்சைதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் கலந்து கொள்ளமாட்டோம் எனத் தமிழக மீனவர்கள் கூறியதாகவும் அந்த விழாவைத் தடுக்கும் நோக்கிலேயே அவர்கள் இவ்வாறு நாடகம் ஆடுவதாகவும் இலங்கைக் கடற்படை கூறியுள்ளது.

ஆனால் இந்திய மத்திய அரசு கடுமையான கண்டனத்தை இலங்கை அரசுக்குத் தெரிவித்துள்ளது. தமிழக மீனவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டமை குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் இந்திய மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது. அதேவேளை இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் சுடப்படுவதை சிலர் நியாயப்படுத்தி வருகின்றார்கள். றோலர் இழுவைப் படகுகள் மூலம் அத்துமீறி வந்து வடக்குக் கிழக்கு கடல் வளங்களை சுரண்டுவது மட்டுமன்றி, எமது நாட்டு மீனவர்களின் வலைகளையும் தமிழக மீனவர்களின் றோலர் படகுகள் அறுத்தெறிவதாகவும் குற்றம் சாட்டுகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மையானவை, மறுக்க முடியாது. ஆனால் இவ்வாறு அத்து மீறி மீன்பிடிப்பது காலம் காலமாக இடம்பெற்று வருகின்றது. ஆனால் அத்துமீறும் மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு பல மீனவர்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர். அத்துமீறி மீன்பிடிப்பது இலங்கையில் மட்டுமல்ல பல நாடுகளிலும் நடைபெறும் ஒன்று.

உதாரணமாக, பாகிஸ்தான் மீனவர்கள் இந்திய எல்லைக்குள்ளும் இந்திய மீனவர்கள் பாகிஸ்தான் எல்லைக்குள்ளும் சென்று மீன்பிடிக்கின்றனர். ஆனால் அரசியல் எதிரிகளாக இருக்கின்ற இந்த இரு பெரியநாடுகளும் அத்து மீறும் மீனவர்களைச் சுட்டுக் கொல்வதில்லை. மாறாக கைது செய்து நீதிமன்றம் ஊடாக பரஸ்பரம் விடுதலை செய்கின்றனர்.

இதுதான் மனிதாபிமானம். ஆனால் இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்களைச் சுடுவதற்குக் காரணம் என்ன? அவர்கள் தமிழர்கள் என்பதுதானா? இதேபோன்று கேரளா கன்னட மீனவர்கள் எல்லைமீறினால் இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்வார்களா? இல்லை. ஏனெனில் அவர்களுக்கு அதன் பின் விளைவுகள் எவ்வாறு பாரதூரமாக அமையும் என்று தெரியும். ஆக இதன் மூலம் இலங்கை இந்திய அரசுகள் தமிழகத் தமிழர்களையும் ஈழத் தமிழர்களையும் சாதுரியமாக பிரச்சினைப்பட வைத்துள்ளன.

எனவே தமிழக மீனவர்களும் ஈழத் தமிழ் மீனவர்களும் அதை உணர்ந்து பேச்சுக்கள் நடத்தவேண்டும். இலங்கை இந்திய அரசுகளின் சதிவலைக்குள் எடுபடாது புரிந்துணர்வுடன் கலந்துரையாடி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வரவேண்டும். இலங்கைக் கடற்படையும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். யுத்த காலத்தில் தமது எல்லைகளையும் தாண்டி பல்லாயிரம் மைல்களுக்கப்பால் சர்வதேச எல்லைகளில் நடமாடிய விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களை இனம் கண்டு தாக்கியழித்த இந்தியக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டாதவாறு கண்காணிக்க முடியும். அது கடினமான பணியல்ல.

ஆகவே தமிழக மீனவர்களை எல்லை தாண்டாதவாறு கண்காணித்து வடக்குக் கிழக்குக் கடற்பரப்பில் இலங்கை மீனவர்கள் நிம்மதியாக, சுதந்திரமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய வழிவகைகளை இலங்கைக் கடற்படையினால் செய்யமுடியும். அதேவேளை கச்சைதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவைப் பயன்படுத்தி இருதரப்பு மீனவர்களும் ஒற்றுமையாக செயற்படுவது குறித்து கவனம் செலுத்துங்கள். இதனைஅரசியல் பிரச்சினையாக மாற்ற இடமளிக்கக்கூடாது.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# யாழ்ப்பாணப் பட்டினத்தின் புதுமை மாதா

## - ஒரு வரலாற்றுக் குறிப்பு -

*அருட்திரு. M.V.E. ரவிச்சந்திரன்*

மறைப்பணியாளராகிய பிரான்சிஸ்கோதே அன்ரோனியா அவர்கள் யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்த வெற்றி மாதா ஆலயத்தின் பொறுப்பாளராக இருந்தபோது அந்த ஆலயத்தின் பீடத்தை அலங்கரிக்க திருமகனைக் கரங்களில் தாங்கி நிற்கும் மரியன்னையின் திருச்சொரூபம் ஒன்றை அமைக்க விரும்பினார். அதற்காக 1614 இல் தாம் கொச்சினியில் இருந்து கொண்டு வந்திருந்த மரக் குற்றி ஒன்றை அன்னக்குட்டி என அறியப்பட்ட உள்ளூர் சிற்பக்கலைஞர் ஒருவரிடம் ஒப்படைத்துவேலையைஆரம்பிக்கப் பணித்தார்.

வேலை தொடங்கிய நாட்களிலிருந்தே பல்வேறு புதுமைகள் நிகழத் தொடங்கின. மக்கள் அன்னக்குட்டியின் வீடு தேடிச் சென்று அன்னையை வணாங்கத் தொடங்கினர். பலர் நோய் நீங்கிக் குணம் பெற்றனர் தமது வேண்டுதல்கள் நிறைவேறப் பெற்றனர். இந்நிலையில் நடந்த புதுமைகளால் ஆச்சரியமும், பயமும் அடைந்த இந்துவான அன்னக்குட்டி திருச்சொரூப வேலைகள் முடியுமுன்பே அதனை ஆலயத்துக்கு எடுத்துச் செல்லுமாறு மறைபணியாளரை வேண்டிக் கொண்டார். பின்பு அவரும் திருமுழுக்குப் பெற்று கத்தோலிக்கரானார்.

இவ்வாறு 1614 ஆடிமாதம் 24ம் திகதி திருச்சொரூபம் கோட்டையில் அமைந்திருந்த வெற்றி அன்னை ஆலயத்துக்கு பெரும் பவனியாக எடுத்து வரப்பட்டு நிறுவப்பட்டது. எதிரிகளிடமிருந்தும் இயற்கை பேரழிவுகளிலிருந்தும் அன்னையின் திருச்சொரூபம் அற்புதமாக மக்களைப் பாதுகாத்தது தொடர்பான பல வரலாறுகள் பேசப்படுகின்றன.

இறுதியாக 1658 இல் போர்த்துக்கேயர் ஒல்லாந்தரிடம் யாழ்ப்பாணக் கோட்டையை இழந்தபோது இத்திருச்சொரூபம்போர்த்துக்கேயரால் மலாக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பின்பு அங்கிருந்து 1661 இல் கோவாவுக்கு எடுத்துப்வரப்பட்டுயாழ்ப்பாண பட்டினத்தின் புதுமைமாதா என்ற பெயரோடு கோவாவில் பேதுருவானவர் தேவாலயத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அந்த அன்னையின் பெயரில் குருநகரில் அமைக்கப்பட்டுள்ள ஆலயம் இன்றும் பக்தர்களை ஈர்த்து புதுமைகள் புரியும் அன்னையின் பரிந்துரை இல்லமாகத் திகழ்வது. யாவரும் அறிந்ததே. அண்மையில் எமது ஆயர் கோவா சென்றபோது இத்திருச் சொரூபத்தை தரிசித்து எமது மறை மாவட்டத்துக்காக செபித்தது குறிப்பிடத்தக்கது.

### திருப்பீடத்தின் 2015ம் ஆண்டின் வரவுசெலவு

திருப்பீடத்தின் 2015ம் ஆண்டின் நிதிநிலைமையில். ஒரு கோடியே 24 இலட்சம் யூரோக்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இருப்பினும் வரவு செலவை நிர்வகிக்கும் முறையிலும், பொருளாதாரச் சீர்திருத்தத்தை அமுல்படுத்துவதிலும் குறிப் பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என. திருப்பீடம் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது. 2015ம் ஆண்டின் நிதி நிலைமை குறித்து திருப்பீட பொருளாதாரச் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பொருளாதாரச் சீர்திருத்தத்தில், இடம் பெற்றுள்ள புதிய கொள்கைகளின்படி செயற்படுவதில் நல்ல முன்னேற்றம் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

# புனித யோசவ் வாஸ் ஆண்டிற்கான முதலாவது ஆரம்ப உரை கொழும்பில் நடைபெற்றது

தேசிய கத்தோலிக்க பொதுநிலையினரின் ஏற்பாட்டில் கொழும்பு பேராலய மாநாட்டு மண்டபத்தில் கண்டி மறைமாவட்ட ஆயர் அதிமேதகு கலாநிதி வியானி பெர்ணாண்டோ ஆண்டகையால் கடந்த மாதம் 18ம் திகதி மேற்படி உரை ஆற்றப்பட்டது.

யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, உட்பட பெரும்பாலும் இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களில் இருந்தும் குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் உட்பட சுமார் 150 பேர் பங்கு பற்றினர்.

தேசிய கத்தோலிக்க பொது நிலையினர் ஆணைக்குழுவின் தலைவர் அதி மேதகு ஆயர் கலாநிதி நோபேட் அன்றாடி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேற்படி ஆணைக்குழுவின் இணைத்தலைவரான அதி வந்தனைக்குரிய யாழ். ஆயர் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களும் கலந்து கொண்டார்.

யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழக பணிப்பாளர் அருட்பணி ம.வி.இ. ரவிச்சந்திரன் அடிகளாரின் ஏற்பாட்டில் இரு பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

காலை 9.45 இற்கு ஆரம்பமான உரை பிற்பகல் ஒரு மணிவரை இரு பிரிவுகளாக நடைபெற்றது. ஆயர் தமது உரையில் புனித யோசேவ் வாஸ் அடிகளாரின் வாழ்க்கையில் காணப்பட்ட தாழ்மை, எளிமை, தபம், செபம் மற்றும் எப்போதும் சாதாரண மக்களுடன் இணைந்து வாழ்ந்தமை அவர் எதிர்நோக்கிய பிரச்சினைகள், கஷ்டங்கள், தேவதிரவிய அனுமானங்களை நிறைவேற்றுவதில் அவர் காட்டிய கரிசனை, அதனால் ஏற்பட்ட ஆபத்துக்களையும் இறைவனின் துணையாய் காப்பாற்றப்பட்டதையும், வீடுகளில் திருப்பலி நிறைவேற்றியதையும், நத்தார் ஆராதனை ஒன்று செய்வதற்கு ஆயத்தமானபோது ஒல்லாந்தப் படைகளினால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டமையையும் சுட்டிக்காட்டி, இன்றைய குருக்கள் எப்படிச் செயற்படவேண்டும், தேடிப்போகவேண்டும் என்ற நல்ல பாதையை புனிதர் காட்டித் தந்துள்ளார் என்று தெரிவித்தார்.

அருட்தந்தை பிலேந்திரன் அடிகளாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட புனித யோசேவ் வாஸ் பற்றிய புத்தகத்தைப் படிக்கும் படியும் கோரினார்.

மேலும் புனிதரின் மொழிப் புலமையைச் சுட்டிக்காட்டி சிங்கள, தமிழ் மொழிகளில் மறையைப் பரப்பியமை பற்றியும் எடுத்துக் கூறினார். அவர் தமது தொடர் உரையின்போது பல்வேறுபட்ட எடுத்துக்காட்டுக்களை நற்செய்தியில் இருந்து மேற்கோள்காட்டி இன்றைய குருக்களும் பொதுநிலையினரும், துறவறத்தில் உள்ள கன்னியரும் அன்றைய யோசவ் வாஸாக மாறவேண்டும் என்றார்.

ஆயர் தமது இரண்டாவது உரையில் இப் புனிதரின் புத்தகங்கள், புதுமைகள், பற்றிக் குறிப்பிட்டார். இலங்கையின் முதல் புனிதரின் சிங்கள தமிழ் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள புத்தகங்களில் இருந்தும் பல விடயங்களை விளக்கிய அவர், எந்தவித புகழ், ஸ்துதி, பரிசுகள், அன்பளிப்புகள் எதையும் பெறவுமில்லை, எதிர்பார்க்கவுமில்லை. முதலிடங்களைத் தேடவும் இல்லை. ஆனால் இன்று நிலைமை எப்படியிருக்கிறது. இதனை மாற்ற முயற்சிப்போம். ஆலயங்களில் இன்றுகூட கேக் வெட்டும் நிகழ்வுகள் இடம்பெறுவதாகக் கூறி அதை கடிந்துகொண்டார்.

திருத்தந்தையின் 2017 ஆம் ஆண்டுக்கான தவக்காலச் செய்தி

# ஆண்டவரின் வாக்கும், அயலாரும் நமக்கான கொடைகள்!



தமிழில்

அருட்பணி எஸ்.எயின்சிலி றொஷான்

"தவக்காலம் ஒரு புதிய தொடக்கம்! சாவின் மீதான கிறிஸ்துவின் வெற்றியான உயிர்ப்பு என்னும் ஒரு குறிப்பிட்ட இலக்கு நோக்கிய பாதை! தவக்காலம் நம்மை விரைந்து மனம் மாற அழைக்கிறது.

முழு உள்ளத்தோடு' (யோவேல் 2:12) ஆண்டவரிடம் திரும்பி வரவும், சாதாரணமாக எல்லோர் போலவும் வாழ்வதில் திருப்தியடையாது ஆண்டவருடனான நட்புறவில் வளரவும் கிறிஸ்தவர்கள் அழைக்கப்படுகின்றனர். நோன்பு, செபம், தானம் போன்ற திருச்சபை வழங்கும் அர்ச்சிப்புக்கான சாதனங்களைப் பயன்படுத்தி நமது ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்திக் கொள்ள ஏற்றகாலம் தவக்காலம்! இவை அனைத்திற்கும் அடித்தளமாய் இருப்பது இறைவார்த்தை (The Word of God)

தவக்காலத்தின் இறைவார்த்தைக்குச் செவிசாய்த்துத் தியானிக்க அழைக்கப்படுகின்றோம். 'பணக்காரனும், ஏழை இலாசரும்' உவமையைப் பற்றி உங்களுடன் எனது கருத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன் (லூக்கா16:19-31) நாம் மகிழ்வான வாழ்வையும், நித்திய வாழ்வையும் அடைவதற்கான திறவுகோலை இந்த உவமை தன்னுள் உள்ளடக்கியுள்ளதால், இக்கதையிலிருந்து நம் வாழ்வுக்குத் தேவையான இறைத் தூண்டுதலைப் பெற முயல்வோம்" என்று கூறுகிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### பிற நபர் ஒரு கொடை
### (The other person is a gift)

இந்த உவமையில் இரண்டு முக்கியமான கதாபாத்திரங்கள் உள்ளன. ஏழை இலாசர் பற்றிய உவமையில் அவனது நிலை குறித்து விரிவாகக் கூறப்படுகிறது. பரிதாபமான சூழ்நிலையில் நிற்கக் கூட இயலாதவனாக பணக்ககாரனின் மேசையிலிருந்து சிந்துவனவற்றைக் கொண்டு பசியாற்ற விரும்புகிறான் அவன் உடல் முழுவதும்புண்! நாய்கள் அப்புண்களை நக்குகின்றன. இந்தக் காட்சி பெரும் துன்பத்தில் வாடும் பரிதாபமான ஒரு மனிதனை விளக்குகிறது.

இந்த ஏழையின் பெயர் இலாசர். நிறைவான வாக்குறுதிகள் அடங்கிய ஒரு பெயர். 'கடவுள் உதவுகிறார்' (God helps) என்பதே இலாசர் என்பதன் பொருள். இந்தக் கதாபாத்திரத்திற்குரியவருக்கு பெயர் உள்ளது. அவரது அங்க அடையாளங்கள் விளக்கப்பட்டுள்ளன. இலாசர் தனக்கே உரிய ஒரு கதையுடைய தனிநபர். இந்த உவமையில் பணக்காரனுக்கு ஏழை இலாசர் கண்ணுக்குத் தெரியாத, அல்லது கண்டுகொள்ளப்படாத ஒரு நபர். ஆனால் இக்கதையின் வாசகர்களாகிய நமக்கு இலாசர் நன்கு பரிச்சயமானவர். இலாசர் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்தபோதிலும், கடவுள் அன்பு செய்யும் கரிசனையுடன் காக்க விரும்பும் ஒரு நபர். ஒரு கொடை விலை மதிப்பற்ற பொக்கிஸமான ஒரு முகமாக இருக்கிறார்.

'மற்றவர்கள்' (Other persons) ஒரு கொடை என்பதே இலாசர் நமக்குத் தரும் பாடம். பிறருடனான சரியான உறவு என்பது அவர்களின் மதிப்பை முறையாக அங்கீகரிப்பதில் தான் அடங்கியுள்ளது. பணக்காரனுடைய வாசல் படியண்டை நிற்கும் ஏழை ஒருபோதும் ஓர் இடையூறாக முடியாது. மாறாக, நம்மை மனமாற்றத்துக்கும் முழு வாழ்வு மாற்றத்துக்கும் அழைக்கும் கடவுளின் ஒரு கொடையாக மட்டுமே இருக்கமுடியும். இந்த 'இலாசர்" 'பணக்காரன் உவமை நமது அருகில் வாழ்பவரோ அல்லது ஒன்று மற்ற ஏழையோ ஒரு கொடை என்பதால், நமது இதயத்தை அவர்களுக்குத் திறக்க அழைக்கிறது. தேவையில் உள்ள அனைவரிலும் இயேசுவின் முகத்தை அடையாளம் கண்டு, நமது இல்லக் கதவுகளை அவர்களுக்குத் திறக்க ஏற்ற காலம் தவக்காலம். நூாம் ஒவ்வொருவரும் நாம் சந்திக்கும் ஒவ்வொருவரையும் தினமும் ஒரு கொடையாகக் காணக் கற்றுக் கொள்வோம்.

### பாவம் நம்மை குருடாக்குகிறது
### (Sin blinds us)

இந்த உவமை பணக்காரனிடம் காணப்படும் முரண்பாடுகளுடன் அவனை விவரிக்கவும் தவறவில்லை. ஏழை இலாசரைப்போல பணக்காரனுக்கு ஒரு பெயர் இல்லை. 'பணக்காரன்' என்றே அழைக்கப்படுகிறான். பணக்காரனின் செல்வச் செழிப்பு (Opulence) அவனது விலை உயர்ந்த ஆடை அணிகலன்கள், தேவைக்கு மிகுந்த பலவகை உணவுகளிலிருந்து வெளிப்படுத்தப்படுகிறது. மெல்லிய செந்நிற உடைகள், வெள்ளி, தங்க உடைகளைவிட உயர்ந்தவை என்பதால் அரசர்கள் மற்றும் கடவுள்களுக்கே உரியவை அது (எரே 10:19) ஒருவருக்குப் புனிதமானவர் என்ற நற்பெயரைக் கொடுக்கக்கூடியது. மற்றவர்களைக் கவர்வதற்காக பணக்காரர் தனது செல்வத்தைக் காட்சிப்படுத்தியதை நன்றாகக் காணமுடிகிறது. 'அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார்' (லூக் 16:19)

இந்தப் பணக்காரனில் மூன்று படிநிலைகளில் பாவத்தின் அழிக்கும் சக்தி ஒட்டுமொத்தமாகக் குடிகொண்டிருக்கிறது. பண ஆசை, வீண் பெருமை மற்றும்கர்வம், புனிதபவுலடியார் இதைப் பற்றிக் கூறுகிறார். "பொருள் ஆசையே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர். அந்த ஆசையால் சிலர் விசுவாசத்தினின்று பிறழ்ந்து திரிந்து, பற்பல வேதனைகளைத் தாங்களாகவே தங்கள் மேல் வருவித்துக் கொள்கிறார்கள்' (1திமொ 6:10) ஊழலுக்கான காரணமும், பொறாமை, வெறுப்பு, சந்தேகம் ஆகியவற்றின் ஊற்றும் பண ஆசையே! நற்செய்தியின் மகிழ்ச்சி' திருத்தூது மடலில் 'ஒரு நபராக மனிதனின் முதன்மையை மறுத்ததால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்க மறுக்கிறோம். புதிய விக்கிரகங்களை உருவாக்கியுள்ளோம்.

பழைய ஏற்பாட்டில் கன்றுக்குட்டியை வணங்கிய சிலை வழிபாடு இன்று புதிய இரக்கமற்ற, புறத்தோற்றமுடைய பண வழிபாடாகவும், மனிதநேயமற்ற காலணி ஆதிக்கத்தின் சர்வாதிகாரமாகவும் மறுவுரு எடுத்துள்ளது" (எண் 55) என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும் இந்த உவமை, பணக்காரனின் பேராசை அவனை வீணாக்குகிறது. அவனது ஆளுமை பிறருக்கு வெளிப்படுத்தும் தோற்றத்தில் மட்டுமே உள்ளது. ஆனால் அவனது தோற்றம் அவனது உள்ளார்ந்த வெறுமையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. அவனது வாழ்வு வெளிப்புறத் தோற்றம், மேலோட்டமான நிலை, (தற்பொழுதுக்கான) வாழ்வு போன்றவற்றிற்குள் சிறைப்பட்டுள்ளது (காண் : நற்செய்தியின் மகிழ்ச்சி, எண் 6.2)

கர்வமே பணக்காரனைப் பாதித்திருந்த ஒழுக்கச் சிதைவு. அவன் அரசனைப்போல் ஆடையணிந்து, கடவுளைப் போல் நடந்து கொண்டான். ஆனால், அடிப்படையில் தான் அழியப் போகும் ஒரு மனிதன் என்பதை மறந்துவிட்டான். செல்வத்தின் மீதான ஆசைக்குப் பலியானவர்களிடம் 'தான்' என்னும் Ego வைத் தவிர வேறு எதுவும் குடிகொள்வதில்லை. இவர்களின் கண்ணுக்கு இவர்களைச் சுற்றியுள்ளவர்கள் தென்படுவதில்லை.

பணத்துடனான பற்று ஒருவிதமான குருட்டுத்தன்மை ஆகும். உவமையில் பசியோடும், உடல்நலம் குன்றி வேதனையிலும் பரிதாபமான நிலையில் தனது வீட்டு வாசலில் கிடந்த ஏழை இலாசர் பணக்காரன் கண்ணுக்குத் தெரியவில்லை

### இறைவார்த்தை ஒரு கொடை

நற்செய்தியில் வரும் 'ஏழை இலாசர் - பணக்காரர்' உவமை ஆண்டவரின் உயிர்ப்பு விழாவை நோக்கிய தயாரிப்புக்கு நமக்கு உதவக்கூடியது. பணக்காரனுடைய அனுபவம் போன்றதொரு அனுபவத்திற்கு விபூதிப் புதன் வழிபாடு நம்மை அழைக்கிறது. குரு உங்கள் நெற்றியில் சாம்பலைப் பூசுகையில் கூறும் வார்த்தைகளை நினைவு கூருங்கள். 'மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய் மறவாதே'

பணக்காரனும் ஏழை லாசரும் இறந்தனர். இந்த உவமையின் முக்கிய பகுதி இவர்களின் இறப்புக்குப் பின்பே இடம்பெறுகிறது. பணக்காரன் ஆபிரகாமை 'தந்தை' என்றழைத்து தானும் இறைவனின் மக்கள் கூட்டத்துக்குச் சொந்தமானவன் என்ற அடிப்படையில் அவருடன் நீண்ட உரையாடலில் ஈடுபடுகிறான் (லூக் 16:24-27) நரக வேதனையில் உள்ளபோதுகூட பணக்காரன் தனக்கும் - இறைவனுக்குமுள்ள உறவு பற்றிப் பேசாமல், முரண்பாடுகள் நிறைந்த மனிதனாகக் காட்சியளிக்கிறான். உண்மையிலேயே அவன் வாழ்வில் கடவுளுக்கென்று எந்த இடமும் இருந்ததில்லை. அவனுக்கு ஒரே கடவுள் அவனே.

இறப்புக்குப் பின் நரக வேதனையில் துன்புற்ற வேளையில்தான் பணக்காரன் கண்ணுக்கு ஏழை இலாசர் தென்படுகிறான். ஏழை இலாசரின் கைவிரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து தனது வேதனையைக் களைய நாவில் வைக்க அனுப்பும்படி பணக்காரன் வேண்டுகிறான். ஏழை இலாசரிடம் என்ன உதவியை பணக்காரன் கேட்கிறானோ, அதைத்தானே அவனும் ஏழை இலாசருக்குச் செய்திருக்க வேண்டும்.

ஆபிரகாம் பணக்காரனுக்குக் கூறியதைக் கவனியுங்கள் 'மகனே, நீ உன் வாழ்நாளில் நலன்களையே பெற்றாய், அதேவேளையில் இலாசர் இன்னல்களையே அடைந்தார். அதை நினைத்துக் கொள். இப்பொழுது அவர் இங்கே ஆறுதல் பெறுகிறார்.

(தொடர்ச்சி 07 ஆம் பக்கம்)




# அமலமரித்தியாகிகள் சபையினருக்கும், அமல மரித்தியாகிகள் சபையிலில்லாதோருக்கும் ஏற்பட்ட போட்டியும் புரிந்துணர்வின்மையும்

**- அருட்பணி S.V.B.மங்களராஜா -**

முதலாவதாக அமலமரித்தியாகிகள் சபையினர் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டத்தில் நன்று வேரூன்றிப் பணியாற்றவே வந்துள்ளனர் என்பதும் இரண்டாவதாக இந்தத் தமது முயற்சிக்கு யேசு சபையினரது முன்னெடுப்புக்கள் தடையாக உள்ளன என்பதுமாகும்.

அத்துடன் இலங்கைக்கு மேலும் அமலமரித்தியாகிகள் சபையினரை அனுப்பவேண்டியதில்லை என்று சபை நிறுவுனர் ஆயர் யூஜின் டி மசனட்டுக்குக் கடிதம் எழுதும்படி ஆயர் பெற்றக்கினிக்கு ஆலோசனை வழங்கியதிலும்ஸ்றிக்லாண்ட்அடிகளாருக்குப்பங்குண்டு என்று செமேரியா அடிகள் கருதினார். அத்துடன் செமேரியா அடிகள் ஆயர் பெற்றக்கினியவர்களது நடவடிக்கை மீது செல்வாக்குச் செலுத்துவதைத்தடுக்கு முகமாக அவரை யாழ்ப்பாண மறைத்தளத்திலிருந்து வெகு தொலைவிலுள்ளதொரு இடத்துக்கு அனுப்பி வைக்கவும் ஸ்றிக்லாண்ட் அடிகள் முயன்றார் என்றும் செமேரியா அடிகள் சந்தேகித்தார். ஸ்றிக்லாண்ட் அடிகள் இலங்கை வந்தமை உயர் நிலைப் பாடசாலை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்தமையெல்லாம் சபையின் மேலதிகாரிகளின் உத்தரவின்றி அவர் தன்னிச்சையாக மேற்கொண்ட நடவடிக்கைகள் என்றுபின்னர்தெரியவந்தாலும்அவரது வருகையும் நடவடிக்கைகளும் துறவற சபைகளிடையே குறிப்பாக யேசு சபையினரிடையேயும் அமல மரித்தியாகிகள் சபையினரிடையேயும் புரிந்துணர்வையும், நல்லுறவையும் வளர்க்க உதவவில்லை என்று தான் கொள்ள வேண்டும்.

அமலமரித்தியாகிகள்சபையினருக்கும் மற்றத்திருப்பணியாளருக்கும்நல்லுறவு சிறப்பாக இருக்கவில்லையென்பதற்கு இருசாராரும் தமக்கென்று தெரிந்தெடுத்த வெவ்வேறானவதிவிடங்களும் சான்றாக அமைந்திருந்தன. யாழ் நகரைப் பொறுத்தளவில் ஒரூனா, கார்சியா, ஸ்றிக்லாண்ட், கஸ்தானியர் ஆகிய திருப்பணியாளர்கள் நகரத்தின் மையத்திலுள்ள அடைக்கல மாதா ஆலய வளாகத்திலுள்ள அறைவீட்டில் தங்கியிருந்தனர். மறு பக்கத்தில் அமல மரித்தியாகிகள் சபையினர் யாழ் பேராலயத்திற்கு அருகாமையிலுள்ள குருக்கள் இல்லத்தில் தங்கியிருந்தனர். கஸ்தானியார் அடிகள் செமேரியா அடிகளிடம் இருமுறையாவது உறுதிபடத் தாம்அமலமரித்தியாகிகள்சபையினருக்கெதிரான எந்தவொரு செய்ற்பாட்டிலும் ஈடுபட்டதில்லையென்றும் அதனை உறுதிப்படுத்தித் தான் திருச்சிலுவை மீது அல்லது திருவிவிலியம் மீது சத்தியம் செய்யவும் தயார் என்று கூறிவந்துள்ளார். அத்துடன் ஸ்றிக்லாணட் அடிகளும் அவரைத்தூண்டிவிடும் சில மறைப்பணியாளரின் கருவியாகவே செயற்படுகின்றார் என்றும் கூறினார்.

ஆயர் பெற்றக்கினியவர்கள் யேசு சபையினரின் அனைத்துலக முதல்வருக்கு எழுதிய கடிதத்திற்கு முதல்வர் பதில் எழுதியபோது தமது சபையினர் ஆயர்பெற்றக்கினியவர்களுக்குஉதவத் தயாராக இருப்பதாகவும் ஆயர் பெற்றக்கினியவர்கள் அருகிலுள்ள மதுரை அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்ட ஆயராக விளங்கிய பேரருட்திரு கனோஸ் ஆண்டகையை நேரடியாகத் தொடர்பு கொள்ளும்படியாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இதன் பின்னர் ஆயர் பெற்றக்கினியவர்கள் யேசு சபையினரைத் திருகோணமலை. மட்டக்களப்பு. முல்லைத்தீவு ஆகிய மறைத்தளங்களையும், பருத்தித்துறை மறைத்தளத்தின் ஒரு பகுதியையும் பராமரிக்கக்கேட்க்விருக்கும் தமது நோக்கத்தை செமேரியா அடிகளுக்கு அறிவித்தார். யேசு சபையினருக்கு இம்மறைத்தளங்கள் வழங்கப்பட்டமை செமேரியா அடிகளுக்குத்திருப்தியளிக்கவில்லை. அமல மரித்தியாகிகள் ஒரு விதத்தில் தாம் ஒரம்கட்டப்படுவதாகவும் தமக்கும் தனியாக மறைத்தளங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் செமேரியா அடிகள் முறையிட்டார். அதற்கு ஆயர் பெற்றக்கினியவர்கள் வடக்கு அப்போஸ்தலிக்க நிர்வாக மாவட்டத்தில் மிகச் சிறந்த பகுதியை அதுவும் மிகவும் ஏற்புடைய நிபந்தனைகளுடன் தருவதாகவும் வாக்களித்தார்.

(தொடரும்...)




❇ "இளையோர் நம்பிக்கை மற்றும் இறையழைப்பைத் தேர்ந்து தெளிதல்" என்ற தலைப்பில் 2018ம் ஆண்டு அக்டோபரில் உலக ஆயர்கள் மான்றம் நடைபெறும்.

❇ மார்ச் 5-10 வரை இத்தாலியின் அரிச்சாவில் வத்திக்கான் தலைமையக அதிகாரிகளுடன் ஆண்டுத் தியானம் செய்ய உள்ளார் திருத்தந்தை

❇ ஈராக் நாட்டில் ஒப்புரவை உருவாக்க கல்தேய வழிபாட்டு முறை முதுபெரும் தந்தை முதலாம் இரபேல் லூயிஸ் சாக்கோ மேற்கொண்டு வரும் முயற்சிகளை அந்நாட்டு கம்யூனிச் கட்சியைச் சேர்ந்தவர்கள் பராட்டியுள்ளனர்.

❇ ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் மார்ட்டின் லூர்த்தர் கத்தோலிக்கத் திருஅவையின் சீர்த்திருத்தங்களை உருவாக்க நினைத்தாரே தவிர பிளவை உருவாக்க நினைக்கவில்லை என்று கிறிஸ்தவ ஒன்றிப்பு வத்திக்கான் அவையின் தலைவர் கர்தினால் கர்ட் கோக் அவர்கள் கூறினார்.

❇ இவ்வாண்டு மே மாதம் புனித பாத்திமா அன்னையின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட இருப்பதை யொட்டி உலகின் அனைத்து நாடுகளிலும் அன்னையின் திருவுருவம் எடுத்துச் செல்லப்படுவதற்கு உதவியாக ஜனவரி 11 அன்று பாத்திமா அன்னையின் 6 திருவுருவங்களை ஆசீர்வதித்து உலகெங்கும் அனுப்பி வைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்

❇ இஸ்ரேல் அரசு பாலஸ்தீன நாட்டின் ஒரு சில பகுதிகளை கடந்த 50 ஆண்டளவாய் ஆக்கிரமித்திருப்பது இஸ்ரேல் பாலஸ்தீன மக்களின் மனித உரிமை மாண்புக்கு எதிரானது என்று புனிதபூமியில்தங்கள்திருப்பயணத்தை நிறைவு செய்த ஆயர்கள் குழு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

❇ தங்கள் குழந்தைகளோடு பெற்றோர் செலவழிக்கும் நேரமே அவர்களது குழந்தைகளுக்கு வழங்கக்கூடிய மிகச்சிறந்த பரிசு என்று உலக ஆயர்கள் மாமன்ற பொதுச்செயலர் கர்தினால் லொரென்சோ பால்திசேரி கூறினார்.

❇ இரக்கம் பற்றிய ஐந்தாவது உலக திருத்துாது மாநாடு 2020ம் ஆண்டில் ஓசியானியாவின் சாமோவா தீவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

❇ 2008ம் ஆண்டு இந்தியாவிலுள்ள ஒடிசாவின் கந்தமால் மாவட்டத்தில் கிறிஸ்தவருக்கெதிராய் நடந்த வன்முறையில் கொல்லப்பட்ட நூறு கிறிஸ்தவ மறைசாட்சிகளை புனிதர்களாக அறிவிப்பதற்குரிய நடைமுறைகளைத் தொடங்க வத்திக்கான் இசைந்திருப்பதாக கர்தினால் ஆசுவால்ட் கிரேசியஸ் அறிவித்தார்.

❇ வத்திக்கான் அருங்காட்சியகத்திலுள்ள சிறந்த கலை வேலைப்பாடுகள் பழமையான எழுத்துப் பிரதிகள் மற்றும் பிற அரிய பொருட்களை உலகறியச் செய்யும் நோக்கத்தில் யு டியூப் சானல் ஒன்றை உருவாக்கியதோடு மட்டுமன்றி தனது இணையத்தளத்தையும் புதுப்பித்துள்ளது வத்திக்கான் அருங்காட்சியகம்.

❇ அனைத்துப் பங்குத்தளங்கள் மற்றும் பள்ளிகளில் கண் தானம் பற்றியவிழிப்புணர்வை ஏற்படுத்தி கண் தானத்தை ஊக்குவிக்கும் வகையில் டெல்லி உயர் மறைமாவட்டம் 2017ம் ஆண்டை பார்வை ஆண்டு என அறிவித்துள்ளது.

❇ தமிழர்களின் கலாசார அடையாளமான ஜல்லிக்கட்டு விளையாட்டு காப்பாற்றப்பட வேண்டும் என்றும் அதைத்தடுக்கநினைப்பதுதமிழர்களின் கலாசார உரிமையைப் பறிப்பதற்குச் சமம் என்றும் மதுரைப் பேராயர் ஆன்டனி பாப்புசாமி கூறியுள்ளார்.

❇ புலம்பெயர்வோரைத் தடை செய்வதற்காக திருஅவைக்குச் சொந்தமான நிலத்தில் கட்டப்படவிருந்த சுவருக்கு ஆஸ்ட்ரிய கத்தோலிக்க ஆயர் அஜிடியஸ் ஸிஃக்ஆகாவிஸ்எதிர்ப்பு தெரிவித்ததால் ஆஸ்ட்ரிய அரசு தனது எல்லைப் பாதுகாப்புக்கொள்கையில்மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. ஆயர் ஸிஃக் கோவிஸ் அவர்கள் மேற்கொண்ட நன்னெறி நிலைப்பாட்டைப் யுனிசெஃப் நிறுவனம் பாராட்டியுள்ளது.

❇ கருக்கலைப்பு பரவலாக இடம் பெறும் ஒரு கலாசாரத்தில் எந்த ஒரு மனிதரின் உரிமையும் பாதுகாப்பாக இல்லையென்று நியூயார்க் கர்தினால் திமோத்தி டோலன் கூறினார்

❇ எல் சால்வதோர் நாட்டில் அரசுக்கும் குற்றக் கும்பல்களுக்குமிடையே ஐ.நா நிறுவனம் இடைநிலை வகித்து அமைதிக்கான உரையாடல்களை நடத்துமாறு கிறிஸ்தவ சபைத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# மனிதத் தவறுகளை அதிரடியாகத் தள்ளுபடி செய்ய இறைவன் தரும் ஓர் அருளின் காலம்



## தவக்காலம்

தவக்காலம் உடலை வருத்திக் கொள்வதற்கு அல்ல, உள்ளத்தைத் திருத்திக் கொள்ளவே! இறைவனின் அளவற்ற அன்பை, இரக்கத்தை, மனிதத் தவறுகளை அதிரடியாகத் தள்ளுபடி செய்யும் இறைவாஞ்சையைத்தியானிக்கஇறைவன்தரும்ஓர்அருளின்காலம். இயேசுக் கிறிஸ்துவின் உன்னதமான உயிர்ப்புப் பெருவிழா மறைபொருளைக் கொண்டாடத் தயாரிப்பதற்கான காலம் தவக்காலம்.

செபம், தவம், தானம் மூலம் நம்மையே தயாரிக்க அழைக்கும் தவக்காலம் பற்றிய திருச்சபை வரலாற்றுப் பாரம்பரிய மரபு மற்றும் விவிலிய ஆதாரங்களைக் காண்பது சிறப்பானதாகும்.

'லெந்து' (lent) என்னும் தவக்காலத்தைக் குறிக்கும் வார்த்தையின் அர்த்தம் 'வசந்த காலம்' ஆகும். இந்த வார்த்தையிலிருந்துதான் 'மார்ச்' என்ற சொல்லும்வருகிறது. பயங்கரக்குளிருக்குப் பின் எல்லா இடங்களிலும் புதிய தளிர்களும், பூக்களும் துளிர்விடும் காலம். ஒரு பசுமையான இனிமையான காலம். இது மக்கள் விரும்பும் காலமும் கூட 'தவக்காலம்' என்னும் தமிழ்ச் சொல்லானது 'தவம்' என்ற கருத்தை மட்டுமே குறிப்பிட்டாலும் 'லெந்து' என்பது அருள் வாழ்வுக்கு ஒரு வசந்தகாலம்' என்னும்' ஓர் ஆழமான உண்மையை வழங்குகிறது. தவக்காலம் உடலை வருத்த அல்ல: உள்ளத்தைத் திருத்தவே. பாவி சாகவேண்டும் என்பதல்ல: மனம் மாறவேண்டும் என்பதே கடவுளின் விருப்பம்.

திருச்சபை தொடக்கக்காலத்தில் கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாடவில்லை (இயேசுவின் பிறப்பு) அது உயிர்ப்பு விழாவையே பெரும் விழாவாகக் கொண்டாடியது. அதனால் ஆண்டவரின் பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு மறைபொருள்கள் அதிகமாக நினைவு கூரப்பட்டன. உயிர்ப்பு விழாவிற்கான தயாரிப்புக் காலமாகவே இந்தத் தவக்காலம் படிப்படியாக வரலாற்றில் வளர்ந்து வந்துள்ளது. கி.பி.203 இல் புனித ஜரேனியுஸ் திருத்தந்தை முதலாம் விக்டருக்கு எழுதிய கடிதத்தில் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா எப்பொழுது கொண்டாட வேண்டும் என்பது பற்றியும், அதற்கான தயாரிப்புகளில்முக்கியமானதுநோன்பு என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

தவக்காலத்தில் நோன்பு இருக்கும் பழக்கம் ஆதித்திருச்சபை மரபிலிருந்தே பின்பற்றப்பட்டு வரும் ஒரு வழக்கம். கி.பி.313 இல் கிறிஸ்தவ மதம் அரச மதமாக மாற்றம் பெற்ற பின்பு, தவக்காலம் ஒரு வரைமுறைக்கு வந்தது. 325 - இல் நடைபெற்ற நிசேயா பொதுச்சங்கம் நாற்பது நாட்கள் தவக்காலம் கொண்டாடுவதை உறுதி செய்தது. புனித அத்தனாசியுஸ் (கி.பி.373) மற்றும் புனித எருசலேம்நகர் சிரில் (கி.பி.386) ஆகியோர் ஆண்டவரின் உயிர்ப்புப் பெரு

**தவக்காலம் உடலை வருத்த அல்ல: உள்ளத்தைத் திருத்தவே! பாவி சாகவேண்டும் என்பதல்ல: மனம் மாற வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம்.**

விழாவிற்கு முன் நாற்பது நாட்கள் தயாரிப்பாக தீவிர நோன்பு பற்றியும், அந்நாள்களில் திருமுழுக்கின் போதனைகள் வழங்கப்படவேண்டியது பற்றியும் வலியுறுத்தியுள்ளனர். கி.பி. 461 இல் திருத்தந்தை புனித லியோ நாற்பது நாட்கள் தவத்தை நாம் அனைவரும் கண்டிப்பாகக் கொண்டாட வேண்டிய ஓர் அப்போஸ்தலிக்க நியமனமாக ஏற்படுத்தினார்.

நாற்பது நாட்கள் நோன்பு பற்றிய வரலாற்று மரபுகளை விவிலியமும் ஆதரிப்பதாக உள்ளது. 'நாற்பது' (40) என்பது விவிலியத்தின் ஆன் மீகப் பொருள் மிகுந்த எண். நோவா காலத்துப் பெருவெள்ளம் நாற்பது பகலும், நாற்பது இரவும் நீடித்தது. (தொ.நூ: 7:1-17) சீனாய் மலையில் பத்துக்கட்டளைகளைப் பெறும் முன் மோசே நாற்பது பகல், நாற்பது இரவு உண்ணாமல், குடிக்காமல் கடவுளுடன் இருந்தார். (விப 34: 28) ஒரேப் மலையில் கடவுளுடன் நாற்பது பகல், இரவுகள் எலியா நடந்துள்ளார் (1 அர 19:8) ஏன், இயேசுவே தமது பொது வாழ்வுப் பணியைத் தொடங்கு முன் பாலைவனத்தில் நாற்பது இரவும், நாற்பது பகலும் நோன்பிருந்து செபித்துள்ளார். (மத் 4:2) இந்த விவிலிய மற்றும் திருச்சபை. (மரபுப் பின்னணி நமது நாற்பது நாட்கள் தவக்கால) நோன்பு முயற்சியைப் பொருளுள்ளதாக்குகின்றது.

தவக்கால நோன்பில் எதை உண்ணலாம், எதை உண்ணக் கூடாது என்ற நோன்பிற்கு வேண்டிய வரலாறு படிப்படியாக வளர்ந்துள்ளது. கி.பி.604 இல் திருத்தந்தை புனித கிரகோரியார் நாம் தவக்காலத்தில் எல்லா வகையான இறைச்சியினின்றும், மிருகங்களிலிருந்தும் பெறப்படும் பால், பால்கட்டி, முட்டை போன்றவைகளை விலக்கி .ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு மட்டும் உண்ணவேண்டும். அதுவும் மாலை மூன்று மணிக்கு இயேசு சிலுவையில் உயிர்விட்ட நேரத்தை நினைவு கூர்ந்து உண்ண வேண்டும். கடினமாக உழைப்பவர்கள் ஒருவேளை உணவைத் தவிர்த்தால் போதும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

மீன் - இயேசுவைக் குறிக்கும் அடையாளம் என்பதால் அதை இறைச்சியுடன் இணைக்கவில்லை என்பதை அறிகின்றோம். எனவே, மீன் உணவை உண்ணலாம் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

திருநீற்றுப் புதன் அன்று தொடங்கும் தவக்காலம், ஞாயிற்றுக் கிழமைகளைத் தவிர்த்து நாற்பது நாட்கள் மட்டுமே கடைப்பிடிக்கப்படுகின்றது. தவக்காலத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமைகள் மார்ச் 19 புனித சூசையப்பர் மற்றும் மார்ச் 25 மங்கள வார்த்தைத் திருநாள்கள் நோன்பு கடைப்பிடிக்க வேண்டிய நாட்கள் இல்லை. ஏனெனில், இந்த நாட்கள் தவக்கால நாற்பது நாட்களில் அடங்குவதில்லை.

தவக்காலம் செபம், தவம், தானம் என்னும் ஆன்மீக அணிகலன்களால் அணிசெய்யப்பட வேண்டியவை. இவைகளில் பரிசேயத்தனம் கலந்து விடாமல் இருக்க இயேசு கூறியுள்ள வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க திருச்சபை அழைக்கிறது.

செபம் செய்யும்போது பிறர் அதைக் கண்டு 'பக்திமான்' என்று கூறும்படி செபிக்காமல், மறைவாய் உள்ள கடவுளை நோக்கி கதவைச் சாத்திக் கொண்டு செபிக்கவும் (மத் 6:58), தவம் (நோன்பு) நோன்பிருக்கையில் தலைக்கு எண்ணெய் தடவி முகவாட்டமின்றி புன்னகையுடன் இருக்கவும். (மத் 6:16-18) தானம், பிறரன்புச் செயல்கள் செய்கிறபோது வலக்கை செய்வதை இடக்கை அறியாவண்ணம் செய்யவும் (மத் 6:1-4) இயேசு வலியுறுத்துவதைக் காணலாம்.

தவக்காலம் தாறுமாறான நமது கிறிஸ்தவ வாழ்வு தரமானதாக மாற இறைநம்பிக்கையில் ஆழப்பட வேண்டும் (உரோ 10:15) ஊனியல்புகளின் செயல்களை வெறுத்து ஒதுக்கவும் (கலா 5:19-21) தூய ஆவி விளைவிக்கும் கனிகளை வாழ்வில் கொண்டிருக்கவும் (கலா 5:22-24) அழைக்கும் காலம் தவக்காலம்.

தவக்காலத்தில் நமது பாவங்களுக்குப் பரிகாரம் தேடி, அருள்வாழ்வில் சிறந்து, வாழ்வைப் புதுப்பிக்க சிலுவைப்பாதை தினந்தோறும் திருப்பலி, நற்கருணை முன் அமர்ந்து தியானம், தனிமையில் இறைவனுடன் உரையாடல், ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கெடுத்தல், இறைவார்த்தையைத் தாகத்துடன் வாசித்து இறைவனின் குரலைக் கேட்கப் பழகுதல், மனித மாண்பை மதித்தல், மனித நேயத்தில் வளர்தல், நீதிக்காக உழைத்தல், ஏழைகளுடன் பகிர்தல், பகைவருடன் ஒப்புரவாதல் போன்றவைகளை இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்புடன் இணைத்துத் தியானித்து மனந்திரும்புவோம். இறைநம்பிக்கையைப் புதுப்பித்துக் கொள்வோம். உடல், உள, ஆன்ம நலத்துடன் வாழ வழிவகுக்கும் காலமே தவக்காலம்.

அருட்பணி எஸ்.எயின்சிலி றொஷான்


## அஞ்சல் வழி விவிலியம் கற்போம்



இரண்டு வருடத்தில்
முழு விவிலியத்தையும் தபால் மூலம் கற்றுக்கொள்ள ஓர் அரியசந்தர்ப்பம்!

**நீங்கள் செய்யவேண்டியது:**

1. இரண்டு வருட முழுவிவிலியபாடத் திட்டமானது 24 புத்தகங்களை உள்ளடக்கியதாகும்.
2. ஒவ்வொருமாதமும் ஒருபுத்தகம் உங்கள் இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்படும். அதை வாசித்து அதன் பின்புறத்திலுள்ள வினாக்களுக்கு விடைஎழுதி அனுப்பவேண்டும்.
3. உங்கள் விடைத்தாள் பெற்றுக் கொண்டதும் அடுத்தபுத்தகம் அனுப்பி வைக்கப்படும்.
4. தபால்மூலம் இதைக்கற்றுக் கொள்ள இரண்டுவருடத்திற்கானமுழுக்கட்டணம் 700 ரூபா மட்டுமே. (இரண்டு தவணைமுறையிலும் பணம் செலுத்தலாம்)
5. தயவுசெய்து உங்கள் காசுக்கட்டளையில் "சுண்டிக்குளிதபால்"நிலையம் என குறிப்பிடவும்.
6. கீழுள்ள விண்ணப் படிவத்தைப் "பூத்திசெய்து காசுக்கட்டளையையும் இணைத்து நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பின்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

*இயக்குனர்:- அஞ்சல் வழி விவிலியக் கல்வி,*
*"கினாரட் அகம்", 15, கொழும்புத்துறை வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

*முழுப்பெயர்:* ........................................
*விலாசம்* : ........................................
........................................

*கல்வித்தகைமை* : .................... *பங்கு* : ....................

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்:
1. உங்களதுவிண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது / நிராகரிக்கப்பட்டது

# யாழ் மறைமாவட்ட பங்குகளின் விசேடநிதி சேகரிப்பு - 2016

| இல | திருப் பாலத்துவ தினம் | பரிசுத்த வாரம் | இறை அழைத்தல் தினம் | மேய்ப்புப் பணி தினம் | பாப்பரசர் தினம் | சுதேச குருக்கள் தினம் | மறைபரப்பு தினம் | கிறிஸ்மஸ் தினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **யாழ்ப்பாண மறைக்கோட்டம்** | | | | | | | | |
| பேராலயம் | 11020.00 | 46000.00 | 20200.00 | 24400.00 | 24700.00 | 23000.00 | 176214.00 | 40000.00 |
| குருநகர் | 16276.00 | 60000.00 | 23000.00 | 43500.00 | 12000.00 | 17600.00 | 100000.00 | 28000.00 |
| அடைக்கலஅன்னைஆலயம் | 6450.00 | 23740.00 | 40000.00 | 23450.00 | 4370.00 | 6400.00 | 20850.00 | 6280.00 |
| பாசையூர் | 8000.00 | 64500.00 | 15000.00 | 30000.00 | 10000.00 | 10000.00 | 30000.00 | 20000.00 |
| நாவாந்துறை | 4405.00 | 45800.00 | 17765.00 | 5250.00 | 6620.00 | 10000.00 | 20000.00 | 25300.00 |
| அஞ்சனந்தாழ்வு - ப.கழகம் | | 24188.00 | 3210.00 | | | 1750.00 | 3413.50 | 3260.00 |
| பண்டியன்தாழ்வு | 11000.00 | 15000.00 | 14000.00 | 8650.00 | 7000.00 | 7500.00 | 22000.00 | 16000.00 |
| கொழும்புத்துறை | 3900.00 | 12000.00 | | 4800.00 | 1200.00 | 2000.00 | 6200.00 | |
| கொய்யாத்தோட்டம் | 3850.00 | 11100.00 | 4150.00 | 1350.00 | 1675.00 | 2990.00 | 4520.00 | 5530.00 |
| திருநெல்வேலி | 6800.00 | 4250.00 | 3280.00 | 2310.00 | 2405.00 | 2790.00 | 4245.00 | 4160.00 |
| கோப்பாய் | | 13200.00 | | | | 5000.00 | . 6500.00 | 12020.00 |
| சுண்டிக்குளி | 14000.00 | 30000.00 | 20920.00 | 8500.00 | 10015.00 | 15350.00 | 23100.00 | 22170.00 |
| நல்லூர் | 6680.00 | 22600.00 | | 3120.00 | | 7110.00 | 11102.00 | 5040.00 |
| **தீவக மறைக்கோட்டம்** | | | | | | | | |
| மண்டைதீவு - அல்லப்பிட்டி | 4040.00 | 11480.00 | 7420.00 | 7550.00 | 3200.00 | 3600.00 | 7400.00 | 8540.00 |
| கரம்பன் | 1500.00 | 5570.00 | 1000.00 | 3000.00 | 2200.00 | 4260.00 | 10680.00 | 2000.00 |
| நாரந்தனை | 6300.00 | 13000.00 | 5750.00 | 4000.00 | 4000.00 | | 5700.00 | |
| ஊர்காவற்துறை | 7000.00 | 16250.00 | 8600.00 | 7000.00 | 4000.00 | 9000.00 | 10000.00 | .20700.00 |
| நெடுந்தீவு | 6000.00 | 20000.00 | 4400.00 | 2100.00 | 1900.00 | 2000.00 | 3000.00 | 4200.00 |
| சாட்டி - மண்கும்மான் | 1250.00 | 1200.00 | 2200.00 | 2200.00 | | 2800.00 | 3500.00 | |
| புங்குடுதீவு | 450.00 | 6710.00 | 550.00 | | | | 1800.00 | |
| **இளவாலை மறைக்கோட்டம்** | | | | | | | | |
| இளவாலை | 11342.00 | 25847.00 | 16060.00 | 10875.00 | 4734.00 | 10800.00 | 23193.00 | 8992.00 |
| மாதகல் | 7450.00 | 18850.00 | 7500.00 | 5000.00 | 2000.00 | 2000.00 | 27150.00 | 8100.00 |
| சில்லாலை | 9190.00 | 10000.00 | 5000.00 | 7000.00 | | 9200.00 | 17120.00 | 15000.00 |
| சங்கானை | 1000.00 | | 2400.00 | 1370.00 | | | | |
| பண்டத்தரிப்பு | 4150.00 | 8600.00 | 11500.00 | | | 7800.00 | 14100.00 | |
| விளான் | 3020.00 | 13020.00 | 5020.00 | 6120.00 | 4020.00 | 5050.00 | 7020.00 | |
| மானிப்பாய் | 10300.00 | 41290.00 | 25620.00 | 15250.00 | 10000.00 | 17000.00 | 33730.00 | 23000.00 |
| மாரீசன்கூடல் | 4260.00 | 9119.00 | 6120.00 | 3000.00 | 1400.00 | 1550.00 | 5100.00 | 5200.00 |
| உரும்பிராய் | 9000.00 | 8200.00 | 21000.00 | 7000.00 | 8600.00 | 16000.00 | 20000.00 | |
| ஆனைக்கோட்டை | 9760.00 | 12000.00 | 5100.00 | 4000.00 | 6000.00 | 12100.00 | 16232.00 | 12500.00 |
| குளமங்கால் | 31500.00 | 40000.00 | 30000.00 | 25000.00 | 19000.00 | 30600.00 | 30000.00 | 22000.00 |
| மல்வம் | 2000.00 | 4000.00 | 2200.00 | 2000.00 | 2000.00 | 2000.00 | 5000.00 | |
| வலித்தூண்டல் | 575.00 | 1035.00 | 990.00 | 1700.00 | 720.00 | 630.00 | 1950.00 | 1900.00 |
| **பருத்தித்துறை மறைக்கோட்டம்** | | | | | | | | |
| பருத்தித்துறை | 12000.00 | 30000.00 | 13500.00 | 18000.00 | 7000.00 | 11000.00 | 22000.00 | |
| தாளையடி | 9160.00 | 15310.00 | 4760.00 | 7730.00 | 5270.00 | 5520.00 | 14850.00 | |
| அச்சுவேலி | 5150.00 | 21410.00 | 2500.00 | 2500.00 | 3000.00 | 3000.00 | 6000.00 | 6200.00 |
| கரவெட்டி | 8500.00 | 9000.00 | 4000.00 | 7000.00 | 3000.00 | 3500.00 | 3500.00 | 7000.00 |
| மிருசுவில் | 4500.00 | 2000.00 | 2000.00 | 2500.00 | 3000.00 | 4500.00 | 3000.00 | 3000.00 |
| சாவகச்சேரி | 6402.00 | 33680.00 | | 6560.00 | | 5580.00 | 9000.00 | 18000.00 |
| மணற்காடு | 5110.00 | | 4800.00 | 5000.00 | 4000.00 | 5000.00 | 6000.00 | |
| சக்கோட்டை | 11216.00 | 36000.00 | 31280.00 | 36000.00 | 4640.00 | 25060.00 | 23054.00 | 9500.00 |
| பளை.முகமாலை | 2100.00 | 4000.00 | 1500.00 | 4000.00 | | 3200.00 | 1000.00 | 2200.00 |
| **கிளி – முல்லை மறைக்கோட்டம்** | | | | | | | | |
| கிளிநொச்சி | 2000.00 | | | 7000.00 | 6410.00 | 6200.00 | 10000.00 | 11000.00 |
| முல்லைத்தீவு | 18800.00 | 23250.00 | 20175.00 | 11800.00 | 5600.00 | 12150.00 | 23700.00 | 13500.00 |
| புதுக்குடியிருப்பு | | 5000.00 | 1500.00 | 1500.00 | | 2000.00 | 2000.00 | 3000.00 |
| மாங்குளம் | 2000.00 | 5000.00 | 1000.00 | | | 2000.00 | 2000.00 | 1000.00 |
| வலைப்பாடு | 5000.00 | 6000.00 | 10000.00 | 3000.00 | | 5000.00 | 30000.00 | |
| தர்மபுரம் | | 3300.00 | 2400.00 | 5580.00 | | 3150.00 | 2340.00 | 4250.00 |
| உருத்திரபுரம் | 4035.00 | 23288.00 | 2736.00 | 3318.00 | 3626.00 | 2320.00 | 4310.00 | 12300.00 |
| இரணைப்பாலை | 7000.00 | | 6000.00 | 6000.00 | 5000.00 | 6000.00 | 11000.00 | |
| அளம்பில் | 4150.00 | 13850.00 | 12350.00 | 8000.00 | | 11792.00 | 9160.00 | |
| வட்டக்கச்சி | 4700.00 | 4400.00 | 4210.00 | 2000.00 | 2000.00 | 10000.00 | 7000.00 | |
| அமதிபுரம் | 2000.00 | 4000.00 | 2700.00 | 2400.00 | 2300.00 | 3600.00 | 3400.00 | 5000.00 |
| மல்லாவி | 1000.00 | 1000.00 | 2200.00 | | 550.00 | 550.00 | 1020.00 | |
| முழங்காவில் | | 4000.00 | 3000.00 | | | | 6600.00 | |
| குமுழமுனை | 5000.00 | 3000.00 | 2000.00 | 1865.00 | | 1990.00 | 2000.00 | |
| பூநகரி | | 4680.00 | 5600.00 | 3070.00 | 1650.00 | 3200.00 | 2831.00 | 2550.00 |
| கூழாமுறிப்பு | 6000.00 | 8000.00 | | | | | 7300.00 | |
| பரந்தன் | 2210.00 | 6270.00 | 5730.00 | 1900.00 | 1700.00 | | | |
| கொக்கிளாய் | 4500.00 | 5000.00 | 2000.00 | 4500.00 | 5500.00 | 3500.00 | 11680.00 | 2000.00 |

அருள்பணி. செ.நேசநாயகம், நிதிமுகாமையாளர், யாழ் மறைமாவட்டம்.

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 23 . 11 . 1935



விண்ணில் 15 . 03 . 2014

## அருளானந்தம் திரேசம்மா

அம்மா உம்மை
அன்போடு நினைக்கின்றோம்.
மூன்றாண்டு கடந்தாயிற்றா?
முடியவில்லை உனை
இன்றும் எம் தலைகோதி
நெற்றியிலே குருசிட்டு
அரவணைப்பதாய் ஒரு உணர்வு.
உம் குழந்தைச் சிரிப்பும்
அன்பை வார்த்து நீ குழைக்கும்
ஒருவாய் சோறும்
போதும் ஒரு சகாப்தம் நாம் வாழ.
கல்வியும்,
கடவுள் பற்றும்
நீ எமக்குத் தந்த சொத்துக்கள்.
நற் பண்புகளே
நீ எமக்குச் சூட்டிய அணிகலன்கள்.
சென்ற ஆண்டில் நாம் கண்ட
திருமண, குருத்துவ யூபிலிகள்
உம் ஆசீரால்
எமக்கு அருளாயின.
இறைவா!
நீ தந்த இந்த அன்பு அன்னைக்காய்
நன்றிக்கரம் குவிக்கின்றோம்.
உம் திருப்பாதம்
அவர் மகிழச் செய்யும்.
புனிதர்களின் சமூக உறவு
எம்மை இணைப்பதை
நம்பிக்கையில் ஏற்று
ஆறுதல் அடைகின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 15.03.2017 (புதன்கிழமை) யாழ். திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் காலை 5.45 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

36/2 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுகளுடன்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்.

# விற்பனைக்கு

## வியாகுலப் பிரசங்க நூல்

வியாகுலப் பிரசங்க நூல் விற்பனைக்கு உண்டு. சில்லறையாகவும் மொத்தமாகவும் வாங்க விரும்புவோர் புனித வளன் கத்தோலிக்க அச்சக விற்பனை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## மலிவு விலையில் வேதாகமம்

வேதாகம நூல், புதிய ஏற்பாடு (சிறியது, பெரியது) உட்பட வழிபாட்டு நூல்கள் திருப்பலி வாசக நூல்கள் என்பன மலிவு விலையில் புனித வளன் கத்தோலிக்க விற்பனை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## தூய யோசவ் வாஸ் திருச்சொரூபம்

யோசவ் வாஸ் ஆண்டில் ஆலயங்களிலும், வீடுகளிலும் வைப்பதற்குரிய தூய யோசவ் வாஸின் அழகிய திருச்சொரூபங்கள் மலிவு விலையில் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்குண்டு.

# விண்ணக வாழ்வில் 2ம் ஆண்டு நினைவு தினம்

மண்ணில் 24 . 10 . 1956



விண்ணில் 13 . 03 . 2015

## யோண் கொன்றாட் மேரி ஆன்

(பவளம்)

நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்து விட்டேன்
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்
இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது
நேரிய வாழ்விற்கான வெற்றி வாகையே
(2.தீமொ:7:8)

37, 6ம் குறுக்குத்தெரு
குருநகர், யாழ்ப்பாணம்.
(AD/15-2017)

பிரிவால் துயருறும்
கணவன், மகள், மகன், மருமகள்

## ஆண்டவரின் வாக்கும்.....

(03 ம் பக்கத் தொடர்ச்சி)

நீயோ மிகுந்த வேதனைப்படுகிறாய் (லூக் 16:25) இறப்புக்குப் பின் வரும் மறு வாழ்வில், ஒரு வகையான நீதி நிலைநாட்டப்படுகிறது. வாழ்வின் தீமைகள் நன்மைகளால் சமன் செய்யப்படுகிறது.

பணக்காரன், இலாசரை உலகிற்கு அனுப்பி உலகத்தில் வாழ்ந்து கொண்டுள்ள தனது உறவினர்களை எச்சரிக்க அனுப்பும்படி ஆபிரகாமை வேண்டுகிறான். அதற்கு ஆபிரகாம் "மோசேயும், இறைவாக்கினர்களும் அவர்களுக்கு உண்டு அவர்களுக்குச் செவிசாய்க்கட்டும்" (லூக் 16:29) என்கிறார். அதற்கு மறுப்புத் தெரிவித்து பணக்காரனின் வாதங்களுக்குப் பதிலளித்த ஆபிரகாம், "அவர்கள் மோசேக்கும், இறைவாக்கினர்களுக்கும் செவிசாய்க்காவிட்டால், இறந்த ஒருவர் உயிர்த்தெழுந்து அவர்களிடம் போனாலும் நம்பமாட்டார்கள்" என்றார்.

(லூக் 16:31)

பணக்காரனின் உண்மையான பிரச்சினை இப்போது வெளிச்சத்துக்கு வருகிறது. அவனது எல்லாப் பிரச்சினைகளுக்கும், துன்பத்துக்கும், எரிநரக வேதனைக்கும் அடிப்படையான காரணம் இறைவார்த்தைக்குச் செவிமடுக்காததே (The failure of heed God's word) இதன் விளைவாக பணக்காரன் கடவுளை அன்பு செய்ததே இல்லை. அதனால் மற்றவர்களைக் கண்டுகொண்டதே கிடையாது.

இறைவார்த்தை உயிருள்ளதும் சக்தி வாய்ந்ததும், இதயங்களை மாற்ற வல்லதும், இறைவன்பால் வழிநடத்தக்கூடியதும் ஆகும்.

தவக்காலம் கிறிஸ்துவுடனான நமது சந்திப்பை, உறவைப் புதுப்பிப்பதற்கும், அவரது வாக்குப்படியும், அருளடையாளங்கள் மற்றும் அயலாரோடுவாழ்வதற்கும்ஏற்றகாலம் ஆகும்.

பகைவன் சாத்தானின் சோதனைகளை, பொய்யான வாக்குறுதிகளை பாலைவனத்தில் தமது நாற்பது நாட்கள் தியானத்தில் முறியடித்த நமது ஆண்டவர், நாம் மேற்கொள்ள வேண்டிய பாதையைக் காட்டுகிறார்.

தூய ஆவியார் நாம் மேற்கொள்ளும் மனமாற்றப் பயணத்தில் நம்மை வழிநடத்தி, இறைவார்த்தை என்னும் இறைக்கொடையின் உண்மையான மாண்பை உணரவும், நமது கண்களைக் குருடாக்கும் நமது பாவங்களிலிருந்து சுத்திகரிக்கவும், தேவையில் உள்ள நமது சகோதர - சகோதரிகளில் பிரசன்னமாகியுள்ள இயேசுவுக்குப் பணிபுரியவும் உதவி புரிவாராக.

கிறிஸ்துவின் உயிர்ப்பு என்னும் வெற்றியில் பங்கு கொள்ளும் நாம் அனைவரும், ஏழை எளியவர்களுக்கு நமது இல்லங்கள், உள்ளங்களைத் திறப்போம். அப்போது மட்டுமே உயிர்ப்பின் மகிழ்ச்சியை (The Joy of Easter) முழுமையாக உணர்ந்து பிறருக்கு அறிவிக்க முடியும்.

# இறைபதத்தில் 31ம் நாள் நினைவில்



அன்னை மடியில் 02 . 01 . 1939

ஆண்டவன் அடியில் 18 . 02 . 2017

## சந்தியாப்பிள்ளை ஞானமணி

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"

வெள்ளை மனம் கொண்ட எம் தாயே
பிள்ளை மனங்கள் நீ அறியாயோ!
மறைந்து போகவில்லை உன் உருவம்
சிறைபிடித்துக் கொள்கிறது எம் மனதை!
இறை உறவில் திளைத்திடுவீர்!

கச்சாய் வீதி,
கொடிகாமம்

(AD/17-2017)

உம் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

# விண்ணக வாழ்வில்

10ம் ஆண்டு நினைவு



அமரர்
அந்தோனிப்பிள்ளை அலெக்ஸ்
மண்ணில் : 17.07.1935
விண்ணில் : 09.03.2007

9 ம் ஆண்டு நினைவு



அமரர்
பிலோமினம்மா அலெக்ஸ்
மண்ணில் : 23.09.1938
விண்ணில் : 03.10.2008

"சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்"
அன்பும் பண்பும் தியாகமும் நிறைந்த உங்கள் வாழ்வு
என்றும் எம் மனங்களில் நீங்கா நினைவுகளாய் இருக்கும்

இல.18, புதுமைமாதா கோவில்,
கிழக்கு வீதி, யாழ்ப்பாணம்.

அன்புடன் நினைவுகூரும்
குடும்பத்தினர்.

(AD/16-2017)

# திருக்குடும்ப சபை யாழ் மாகாண முதல்வரிடமிருந்து

சகோதரி லூட்ஸ் யோசவ் அவர்கள் கடந்த 46 வருடங்களாக எமது யாழ். மாகாண திருக்குடும்ப சபையில் அங்கத்துவம் வகித்தவர். பலதரப்பட்ட ஏழ்மை நிலையில் இரந்த மக்களுக்கு இவர் ஆற்றிய பணி அதிகம். குறிப்பாக இவருக்கே உரித்தான தனித்துவமான ஆற்றல்களுடன் மாற்றாற்றல் விசேட தேவையிலுள்ள சிறுவர்களுக்கு இவர் ஆற்றிய பணியை நாங்கள் நன்றியோடு நினைவுகூருகின்றோம். கடந்த மார்கழி 29ம் திகதி 2016, எம் சகோதரி எமது திருக்குடும்ப சபையிலிருந்து விலகிக்கொண்டார். இவரது வாழ்வும் பணியும் இறையாசியுடன் தொடர, நற்சுகத்துடன் வாழ நாங்கள் ஆசிக்கின்றோம்.

அருட்சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ்
மாகாண முதல்வர், திருக்குடும்ப சபை, யாழ்ப்பாணம்.

# வெளிநாடுகளிலிருந்து கடிதங்கள் அனுப்பி ஞானப்பெற்றோராகும் நிலைமாறவேண்டும்

## கொழும்புத்துறை உறுதிப்பூசுதல் திருச்சடங்கில் யாழ். ஆயர்



ஞானப்பெற்றோர் பிள்ளைகளின் சூழலில் இருந்து அவர்களின் விசுவாச வாழ்வுநெறிமுறைகளைக்கண்காணிப் பவர்களாக பொறுப்புடன் செயலாற்ற வேண்டும் வெளிநாடுகளிலி ருந்து கடிதங்கள் அனுப்பி ஞானப்பெற்றோ ராகும் நிலைமாற வேண்டும்.

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் உறுதிப் பூசுதல் திருவருட்சாதனம் வழங்கும் திருப்பலியை ஒப்புக்கொடுத்து மறையுரை யாற்றும் போது யாழ் ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

ஆதித்திருச்சபையில் திருமுழுக்கு இரண்டுமுறையில் வழங்கப்பட்டு வந்தது. நீரினாலும் திருத்தூதர்கள் பிள்ளைகளின் தலையில் கைவைத்து வழங்கி வந்தனர். இதுவே பிள்ளைகளின் உறுதிப்பூசுதல் அருட்சாதனமாகத் தொடர்கிறது. தூயஆவியின் கொடைகள் ஏழு என்றபோதும் அவற்றினூடாக அநேக கொடைகளைத் பொழிகிறார். தூய ஆவியாரே என்னிடம் எழுந்தருளி வாரும் என குறைந்தது 5 முறையாவது தினமும் சொல்லி வாருங்கள். மன்னிப்பு, உதவி, சீடத்துவம், கேட்பதை விட மேலதிகமாக உதவிசெய்வது என்பவற்றை வெளிப் படுத்துவது தான் கிறிஸ்தவம். இது தான் தூயஆவியாருக்கு சான்று என மேலும் ஆயர் தெரிவித்தார்.பங்குத் தந்தை அருட்பணி ஏ. கிறிஸ்தோப்பர் அடிகளின் ஏற்பாட்டில் 30 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது.

### பணம் அல்ல....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உறவைப் பேணுவது என்பது பிறரின் மதிப்பை நன்றியுணர்வுடன் ஏற்பதில் அடக்கியுள்ளது என்றும், செல்வரின் வீட்டு வாயிலில் ஏழை மனிதர் இருப்பது தொந்தரவல்ல அது மனமாற்றத்திற்கான அழைப்பு என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை. அண்டை வீட்டாரோ அல்லது அறிமுகமற்ற ஏழையோ ஒவ்வொரு மனிதரும் ஒரு கொடை என்பதால் நம் இதயக் கதவைப் பிறருக்குத் திறக்க இவ்வுவமை அழைப்பு விடுக்கிறது என்று கூறியுள்ள திருத்தந்தை தேவையில் இருக்கும் அனைவரிலும் இயேசுவைக் கண்டு அவர்களுக்கு நம் கதவுகளைத் திறக்க ஏற்றது இத் தவக்காலம் என்று கூறியுள்ளார்.

இத்தகைய மக்களை ஒவ்வொரு வாழ்வும் ஏற்கப்பட மதிக்கப்பட அன்பு கூரப்பட தகுதியுடைய ஒரு கொடை நலிந்தோரின் வாழ்வை வரவேற்று அன்புகூரவும் நம் கண்களைத் திறக்கவும் இறைவார்த்தை உதவுகிறது என திருத்தந்தை தமது 2017 ஆம் ஆண்டுக்கான தவக்காலச் செய்தியில் கூறி நிற்கின்றார்.

### அருளாளர் ஆஸ்கர் ரொமேரோ பெயரால் புதுமை

அருளாளர் ஆஸ்கர் ரொமேரோ அவர்களின் பரிந்துரையால் நிகழ்ந்துள்ள ஒரு புதுமையைக் குறித்த தகவல் தொகுப்பு, வத்திக்கானை அடைந்துள்ளது என்று, Zenit கத்தோலிக்க இதழ் கூறியுள்ளது. பேராயர் ஆஸ்கர் ரொமேரோ அவர் களின் பரிந்துரையால், கருவுற்றிருந்த ஒருபெண்ணுக்கு, கருப்பையில் ஏற்பட்ட பிரச்சினைகள் தீர்ந்து, தாயும், சேயும், புதுமையான வழியில் உயிர் பிழைத்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

### 51 வது உலக ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல நோ்மறையான செய்திகள் விலைபோகாது. மனிதத் துன்பங்களின் கொடுமைகளும், தீமையின் தெளிவில்லாத செய்திகளும் வரவேற்பைப் பெறும் என்ற எண்ணம் ஊடகத்துறையில் நிலவும் சூழலில் நம் மனச்சாட்சிகள் நம்பிக்கையின்மையில் விழக்கூடிய சோதனைகள் எப்போதும் உள்ளன எனவும் தன் செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை. நம் காலத்தில் வாழும் மக்களுக்கு நற்செய்தியை மையப்படுத்திய கதைகளை வழங்குமாறு ஒவ்வொருவரையும் விண்ணப்பிப்பதாக மேலும் கூறியுள்ளார் திருத் தந்தை பிரான்சிஸ்.

இயேசுவாகிய நற்செய்தி இறையாட்சியின் விதையில் நம்பிக்கை, தூய ஆவியாரின் வழிகாட்டுதலில் அர்ப்பணம் ஆகிய தலைப்புக்களில், இச் செய்தியை விளக்கியுள்ளார் திருத் தந்தை பிரான்சிஸ்.

வருகிற மே 28ம் தேதி 51வது சமூகத் தொடர்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. 'அஞ்சாதே, ஏனெனில் நான் உன்னோடு இருக்கின்றேன் (எசா.43:5) நம் காலத்தில் நம்பிக்கை மற்றும் உறுதிப்பாட்டை வழங்குவது என்ற தலைப்பில் திருத்தந்தையின் இச் செய்தி அமைந்துள்ளது.

### வவுனிக்குளத்தில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வவுனிக்குள பங்குத்தந்தை அருட்திரு குயின்சன் பெனான்டோ அடிகளார் முன்னெடுத்திருந்தார். யாத்திரை மேற் கொள்ள விரும்புகின்றவர்கள் தமது பங்குத்தந்தையர்கள் ஊடாக வவுனிக் குள பங்குத்தந்தை அருட்பணி குயின்சன் அடிகளாருடன் தொடர்பு கொண்டு முன் ஆயத்தங்கள் செய்து யாத்திரைகளை மேற்கொள்ள முடியு மென அறிவுறுத்தப்படுகின்றனர்அவர்க ளுக்கு வேண்டிய மதியஉணவு ஒழுங்கு செய்துகொள்ள முடியும்.

யாத்திரை மேற்கொள்வோர் ஏ-9 வீதிவழியாக பயணிப்பின் மாங்குளம் சந்தியடி துணுக்காய் வீதி ➜ வன்னிவிளாங்குளம் சந்தி ➜ வவுனிக்குளம் வீதி ➜ கல்வாரியை அடையலாம்.

ஏ - 32 வீதியால் பயணிப்போர் வெள்ளாங்குளம் சந்தி ➜ துணுக்காய் வீதி ➜ ஒட்டறுத்தகுளம் சந்தி ➜ வவுனிக்குளம் வீதி ➜ கல்வாரியை அடையலாம்.

இப் புதிய கல்வாரிப் பூங்காவில் இத் தவக்காலத்து வழிபாடுகளை 24.03. 2017 வெள்ளி பி.ப2.00 மணிமுதல் பி.ப 5.00 மணிவரை கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக்கோட்டத்தினருக் கும், 25.03.2017 சனிக்கிழமை இளவாலை மறைக்கோட்ட இறைமக்களும், 01.04.2017 சனிக்கிழமை யாழ்ப்பாணம், பருத்தித்துறை மறைக்கோட்ட இறைமக்களும் கலந்துகொண்டு வழிபாடுகளை சிறப்பிப்பார்கள்.

### யாழ் பட்டினத்தின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பயணத்தின் போது பழமை மிகு வரலாறு கொண்ட எம் யாழ். பட்டினத்து மாதா திருச்சுரூபத்தை யாழ். மறைமாவட்டத்துக்குக் கொண்டு வருவதற்கான பூர்வீக நடவடிக்கைகளை யாழ். ஆயர் அவர்கள் ஆரம்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வாசக நேயர் களின் தகவலுக்காக இவ் யாழ். பட்டினத்து மாதா பற்றிய வரலாற்றுக் குறிப்பு ஒன்றை பக்கம் இரண்டில் காணலாம்.)

### தவக்காலத் தியானங்களும் இறைதியான குணமாக்கல் ஆராதனைகளும்

அருட்தந்தை ஆல்பேட், சகோ.சாஜ் ஆகியோரால் நடாத்தப்படும்



மார்ச் 17, வெள்ளி காலை 9.00 மணிமுதல் 12.00 மணி வரை
**இறைதியான இல்லம், யாழ்ப்பாணம்.**

மார்ச் 17, வெள்ளி , 18 சனி, 19 ஞாயிறு தினமும் மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை
**சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய முன்றல்**

மார்ச் 18, சனி காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
**மெலிஞ்சிமுனை கிறிஸ்து அரசர் ஆலயம்**

மார்ச் 19 ஞாயிறு - காலை 9.00 மணிமுதல் 12.00 மணி வரை
**புனித யுவானியார் ஆலயம், சுண்டிக்குளி**

மார்ச் 20 திங்கள் - மாலை 5.00 மணிமுதல் 8.00 மணி வரை
**மணியந்தோட்டம் தூய கார்த்தர் ஆலய முன்றல்**

மார்ச் 21 செவ்வாய் - மாலை 5.00 மணிமுதல் 8.00 மணி வரை
**பாசையூர் புனித அந்தோனியார் ஆலய முன்றல்**

மார்ச் 22 புதன் - மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை
**இரணைப்பாலை புனித பற்றிமா ஆலய முன்றல்**

மார்ச் 23 வியாழன் - மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை
**முள்ளியவளை புனித திரேசம்மாள் ஆலயம்**

மார்ச் 24 வெள்ளி காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை
**இறைதியான இல்லம், யாழ்ப்பாணம்.**

**மார் 24, வெள்ளி பி.ப. 2.00 மணி முதல் 5.00 மணி வரை**
**மறைமாவட்ட தவக்கால யாத்திரை கல்வாரி – வவுனிக்குளம்**

மார்ச் 25 சனி - காலை 9.00 மணிமுதல் 12.00 வரை
**புனித பற்றிமா அன்னை திருத்தலம் – பண்டத்தரிப்பு**

மார்ச் 25, சனி 26, ஞாயிறு தினமும் 5.00 மணி முதல் 8.00 மணி வரை
**தும்பளை தூய லூர்த்து அன்னை திருத்தலம்**

**மார் 26, ஞாயிறு 9.00 மணி முதல் 12.00 மணி வரை**
**இளைஞர் , யுவதிகட்கு (புனித யாகப்பர் ஆலயம், குருநகர்)**

மார்ச் 27 திங்கள் - மாலை 5.00 மணிமுதல் 8.00 வரை
**தூய அடைக்கல அன்னை ஆலயம் – யாழ்ப்பாணம்**

மார்ச் 28 செவ்வாய் - மாலை 5.00 மணிமுதல் 8.00 வரை
**மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய முன்றல்**

மார்ச் 29 புதன் மாலை 5.00 மணிமுதல் 8.00 வரை
**யாழ். மரியன்னை பேராலய வளாகம், யாழ்ப்பாணம்.**

இறைதியானக் குழு,
யாழ். மறைமாவட்டம்

### துயர் பகிர்கின்றோம்

எமது யாழ். மறைமாவட்ட குருவும் பளை பங்குத்தந்தையுமாகிய அருட்தந்தை A.V.சில்வெஸ்ரர்தாஸ் அடிகளாரின் அன்புத்தந்தை அந்தோனிமுத்து அன்ரனி வின்சன் (துரைமணி) அவர்கள் 03.03.2017 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் 06.03.2017 அன்று இவரின் சொந்த இடமாகிய செம்பியன்பற்றில் நடைபெற்றது.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்பதுடன் அன்னாரது இழப்பில் துயருற்றிருக்கும் குடும்ப உறவுகளுக்கும் அருட்தந்தை A.V.சில்வெஸ்ரர்தாஸ் அடிகளா ருக்கும் பாதுகாவலன் வாசகர் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2017 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது